**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –6**

**ந.க.எண். 033 /பிடி1/இ3/2019, நாள் 27.08.2019**

| | |
|---|---|
| **பொருள்** | பள்ளிக்கல்வி – அறிவுத்திறன் வகுப்புகள் (Smart Class Rooms) சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளின் பிரதமமந்திரி ஜேன் விகாஸ் காரியாக்கிராம் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் அறிவுத்திறன் வகுப்புகள் ஏற்படுத்துதல் – உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி – பயன்பாட்டிற்கு வழங்குவது சார்பு. |
| **பார்வை** | பிரதமமந்திரி ஜேன் விகாஸ் காரியாக்கிராம் பகுதி மேம்பாட்டுத் திட்டம். |

******

மேற்காணும் பொருள் சார்ந்து கீழ்க்காணும் முதன்மைக்கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் 60 : 40 என்ற பங்களிப்பில் பிரதமந்திரி ஜேன் விகாஸ் காரியாகிராம் திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6–8 , 9–10, 11–12 வகுப்புகளில் அறிவுத்திறன் வகுப்புகள் ஏற்படுத்தி அதன்மூலம் உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்கி,தேசிய சராசரிக்கு இணையாக கொண்டு வருவதினை நோக்கமாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள பள்ளிகள் மற்றும் அப்பள்ளியில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் 6–8 , 9–10, 11–12 வகுப்பறைகளின் எண்ணிக்கை பெறப்பட்டு அதன் பட்டியல் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், மாதிரி திட்ட அறிக்கையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலின்படி சம்பந்தப்பட்ட பள்ளிகள் செயல்படும் ஒன்றியத்தினை சேர்ந்த வட்டாரக்கல்வி அலுவலர் (BEO) தமது ஒன்றியத்தில் செயல்படும் அரசு உயர் நிலை/மேல்நிலை பள்ளிகளுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி திட்ட அறிக்கை (Model Project proposal) அடிப்படையில் மாநகராட்சி / நகராட்சி /பேரூராட்சி /ஒன்றிய பள்ளிகள் வாரியாக தனித்தனியே கருத்துருவினை தயார் செய்து, ஒன்றிய பள்ளிகளைப்

பொறுத்தவரையில் வட்டார வளர்ச்சி அலுவலருக்கும், அதே போன்று மாநகராட்சி / நகராட்சி /பேரூராட்சி / பள்ளிகள் பொறுத்தவரை சம்மந்தப்பட்ட ஆணையாளர்களுக்கு அனுப்பி அங்கே செயல்படும் ஒன்றிய அளவிலான குழுவின் ஒப்புதல் பெற்று அவர்கள் மூலம் மாவட்டக்குழுவின் ஒப்புதல் பெறும் பொருட்டு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி மாவட்டக்குழு ஒப்புதல் அளித்து மாவட்ட ஆட்சியர் மூலம் அதனை சிறுபான்மையினர் நல ஆணையாளர், சென்னை –5 அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும் என்பது நடைமுறையாகும் என்பது அறியப்பட்டுள்ளது. எனவே, கருத்துருக்கள் தயார் செய்து அனுப்புவதற்கு கீழ்க்காணும் வழிமுறைகள் தெரிவிக்கப்படுகிறது.

**அ) முதன்மைக்கல்வி அலுவலர்கள் செய்ய வேண்டியது**

முதன்மைக்கல்வி அலுவலர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலின் படி சம்மந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர் அவர்களை நேரில் அழைத்து, உடன் சார்ந்த பள்ளிகளின் பெயர்ப் பட்டியல் மற்றும் மாதிரி திட்ட அறிக்கை அளித்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து தக்க அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும். பட்டியலில் இடம் பெற்றுள்ள பள்ளிகளில் ஏற்கனவே அறிவுதிறன் வகுப்பறைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அவ்வகுப்பறையினை நீக்கி விட்டு இதர வகுப்பு அறைகளுக்கு அறிவுத்திறன் வகுப்புகள் ஏற்படுத்த கருத்துருக்கள் அளிக்கப்பட வேண்டும். எனவே, முதன்மைக்கல்வி அலுவலர் தக்க கருத்துரு அனுப்புவதை கண்காணித்து அதன் நகலினை பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

**ஆ) வட்டாரக்கல்வி அலுவலர்களின் பணிகள்**

1. இச்செயல்முறைகளில் இணைப்பில் கண்டுள்ள பட்டியலின்படி ஒன்றிய பகுதிகளில் இயங்கும் அரசு உயர்நிலைப்பள்ளி/ மேல்நிலைப்பள்ளியில் 6–8, 9–10, மற்றும் 11–12 ஆகிய வகுப்புகளில் அறிவுத்திறன் வகுப்புகள் ஏற்படுத்த இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கருத்துருக்கள் அடிப்படையில் கருத்துருக்கள் தயார் செய்தல் வேண்டும்.
2. பட்டியலில் இடம் பெற்றுள்ள பள்ளிகளில் ஏற்கனவே வேறு திட்டங்களில் அறிவுத்திறன் வகுப்புகள்/மெய்நிகர் கணினி வகுப்புகள் முழுமையாக

ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதனை நீக்கிவிட்டு இதர பள்ளிகளுக்கு ஏற்படுத்த கருத்துருக்கள் தயார் செய்து அனுப்ப வேண்டும்.

3. பட்டியலில் இடம் பெற்றுள்ள பள்ளிகளில் ஏற்கனவே வேறு திட்டங்களில் பகுதியாக அறிவுத்திறன் வகுப்புகள்/மெய்நிகர் கணினி வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அவ்வகுப்பறைகள் நீக்கிட இதர வகுப்பறைகளுக்கு கணக்கிட்டு கருத்துரு தயார் செய்து அனுப்ப வேண்டும்.

4. High Tech Lab பொறுத்தவரை அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளிலும் ஏற்படுத்தப்படுகிறது என்றாலும், அதில் (Smart Board) அறிவுத்திறன் பலகை ஏற்படுத்தவில்லை என்பதால் செய்து இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்து பள்ளிகளிலும் High Tech Lab நிறுவ ஒதுக்கீடு செய்யப்பட்ட வகுப்பறை தவிர்த்து இதர வகுப்பு அறையில் அமைக்க நடவடிக்கை எடுத்து கணக்கீடு செய்து கருத்துருக்கள் அனுப்ப வேண்டும்.

5. எனவே, சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு நேரில் சென்று, தலைமையாசிரியருடன் கலந்தாலோசித்து கருத்துருக்கள் தயார் செய்து., ஊராட்சி/ நகராட்சி/ மாநகராட்சி பள்ளிகள் வாரியாக, தனித்தனியாக நான்கு படிகளில் கருத்துருக்கள் தயார் செய்து, அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர்/பேரூராட்சி அலுவலர்/ நகராட்சி ஆணையர்/மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு அனுப்பி ஒன்றிய குழு (Block Level Committee) ஒப்புதல் பெற்று அந்தந்த அலுவலர்கள் மூலம் மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்படும் மாவட்ட குழுவிற்கு (District Level Committee) ஒப்புதல் பெறும் பொருட்டு அனுப்பிவைக்க வேண்டும். மேலும், கருத்துரு அனுப்பி விட்டு அதன் நகல் ஒன்றினை முதன்மைக்கல்வி அலுவலருக்கு அனுப்ப வேண்டும் .

6. <u>முதன்மைக் கல்வி அலுவலர் செய்யவேண்டியது.</u>

முதன்மைக் கல்வி அலுவலர், ஒன்றிய குழுவால் ஒப்புதல் பெறப்பட்ட கருத்துருக்கள் அனைத்தும் மாவட்டக் குழுவின் ஒப்புதல் பெற்று மாவட்ட ஆட்சியர் மூலம் சென்னை–05, சிறுபான்மையினர் நல ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. முதன்மைக்கல்வி அலுவலர் இக்கடிதம் கிடைக்கப் பெற்றதும், எவ்வித சுணக்கம் இன்றி உடன் நடவடிக்கை எடுத்து 08.2019க்குள் கருத்துருக்கள் வட்டார வளர்ச்சி அலுவலரால் தயார் செய்து ஒன்றிய அளவிலான குழுவிற்கு கருத்துரு

அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதன் நகல் ஒன்றினை உரிய வட்டார கல்வி அலுவலரிடமிருந்து பெற்று அதனை பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு முகப்பு கடிதத்துடன் அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதனை மிகவும் முக்கிய அலுவலாக கொள்ளவும்.

**இணைப்பு**

பள்ளிகளின் பெயர் பட்டியல் மற்றும் மாதிரி திட்ட அறிக்கை

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்

சம்மந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்,

வேலூர், திண்டுக்கல், நீலகிரி, நாகப்பட்டினம்,புதுக்கோட்டை, இராமநாதபுரம்,

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி

நகல்

அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை,

தலைமைச்செயலகம் , சென்னை – 9 (அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.)

நகல்

ஆணையாளர்,

பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,

சேப்பாக்கம்,

சென்னை–5 (அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.)

நகல்

தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும், கனிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.